| அலகு 8 வினாக்கள் | சைவநெறி | தரம் : 9 |
|---|---|---|

## விடுமுறை கால விஷேட வேலைத்திட்டம்
### இரண்டாந்தவணை -2020

மாணவர் பெயர் :...............................

## அலகு 8 விரதங்கள்

**விரதங்கள் என்னும் பாடத்தை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

1. விரதம் என்றால் என்ன?
2. விரதங்கள் எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கின்றன?
3. வார விரதங்களுள் இரண்டும், பட்ச விரதங்களுள் இரண்டும் குறிப்பிடுக
4. வருடத்துக்கொருமுறை அனுஷ்டிக்கும் விரதங்களுள் நான்கு தருக
5. பூரம் எத்தனையாவது நட்சத்திரம்?
6. சிவபெருமானுக்குரிய நட்சத்திரத்தையும், விஷ்ணுவுக்குரிய நட்சத்திரத்தையும் குறிப்பிடுக
7. பூரம் யாருக்குரிய சிறப்பு திருநாளாகும்?
8. சூரியனது போக்கின் அடிப்படையில் ஒரு வருடம் எத்தனையாக பிரிக்கப்படுகிறது? அக்காலப்பகுதிகளை குறிப்பிடுக
9. ஆடிமாதம் முதலாம் நாள் கொண்டாடப்படும் பண்டிகை எது?
10. ஆடிமாதத்தில் உழவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் எவை?
11. ஆடிப்பூரம் யாருக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது?
12. ஆடிப்பூர தினத்தன்று திருஅவதாரம் செய்தவர் யார்?
13. ஏனைய சதுர்த்தியை விட ஆவணிச்சதுர்த்தி விரதம் முக்கியமாக கருதப்படுவது ஏன்?
14. ஆவணிச்சதுர்த்தி விரதம் நோற்க்கப்படும் முறையை விளக்குக
15. இவ்விரத நாட்களில் விநாயகருக்கு அர்ச்சித்து பலன் பெறக்கூடிய பத்திரம் எது?
16. நவராத்திரி விரதம் எம்மாதம் எத்தனை நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது?
17. கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றிற்கு அதிபதிகளாக விளங்குபவர்களை குறிப்பிடுக
18. கோயில், பாடசாலை ஆகிய இடங்களில் நவராத்திரி விழாவை எவ்வாறு கொண்டாடுவர்?
19. நவராத்திரியின் பத்தாம் நாள் நடைபெறும் நிகழ்வு யாது? அது வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
20. தசமி தினத்தன்று அன்று கோயில்களில் வாழைவெட்டு நடைபெறுவதன் காரணம் யாது?
21. விஜயதசமி தினத்தன்று பாடசாலைகளிலும் ,கோயில்களிலும் நடைபெறும் முக்கிய நிகழ்வு யாது

அலகு 9
வினாக்கள்

# சைவநெறி

தரம் : 9

## விடுமுறை கால விஷேட வேலைத்திட்டம்

இரண்டாந்தவணை

மாணவர் பெயர் :…………………………

4.5.2020

## அலகு 9 ஆடிப்பிறப்பு

1. இந்து மக்கள் கொண்டாடும் பண்டிகைகள் மூன்று குறிப்பிடுக
2. ஆடிப்பிறப்பு எப்போது கொண்டாடப்படுகிறது
3. தைமாதப் பிறப்பில் கொண்டாடப்படும் பண்டிகை எது?
4. நாம் வாழும் இந்த பூமியானது எவ்வாறு சுழன்று சூரியனையும் சுற்றி வருகின்றது?
5. பூமி சூரியனை சுற்றினாலும் நமக்கு சூரியன் சுற்றுவது போல் தென்படும் நகர்ச்சியானது எத்தனை வகையாக அமைகிறது? அவ்வகைகளை குறிப்பிடுக
6. உத்தராயணம் என்றால் என்ன?
7. தட்சணாயனம் என்றால் என்ன?
8. நமது புராண மரபின் படி நமது ஒரு வருடம் தேவர்களுக்கு எவ்வளவு காலப்பகுதியாக கூறப்படுகிறது?
9. தேவர்களுக்கான பகல் பொழுது எக்காலப்பகுதி? இரவு பொழுது எக்காலப்பகுதி?
10. உத்தராயண காலம் எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடிவடைகிறது?
11. தட்சணாயின காலம் எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடிவடைகிறது?
12. இராசிகள் எத்தனை?
13. உத்தராயண காலத்தில் சூரியன் பயணம் செய்யும் இராசிகள் எவை?
14. தட்சணாயன காலத்தில் சூரியன் பயணம் செய்யும் இராசிகள் எவை?
15. உத்தராயண கால தொடக்கத்தில் கொண்டாடும் பண்டிகை எது?
16. தடசணாயன காலத்தில் கொண்டாடும் பண்டிகை எது?
17. சூரியன் மகர இராசியில் பிரவேசிக்கும் நாளில் தைப்பபொங்கல் கொண்டாடப்படுவதால் அது வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
18. ஆடிப்பிறப்பன்று தேவர்களுக்கும்,பிதிர்களுக்கும் படைக்கப்படும் பொருட்கள் எவை?
19. ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை எனப் பாடியவர் யார்? அவருக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
20. பண்டிகைகள் கொண்டாடுவதால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?

ஆசிரியை : திருமதி. அ.கிருஷ்ணவேணி கொ/ முகத்துவாரம் இந்துக்கல்லூரி

அலகு- 9
வினாக்கள்

**சைவநெறி**

தரம் : 10

## விடுமுறை கால வேலைத்திட்டம்
## இரண்டாந்தவணை -2020

மாணவர் பெயர் :........................

### அலகு 9 திருமுறைகள்

1

1. திருமுறை என்பதன் பொருள் யாது?
2. திருமுறைகளை அருளியோர் எத்தனை பேர்?
3. திருமுறைகள் எத்தனை?
4. திருமுறைகளை தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
5. திருமுறைகளை பண்ணுடன் பாடுவதால் கிடைக்கும் நன்மைகள் எவை?
6. முதல் ஏழு திருமுறைகளுக்கும் வழங்கப்படும் சிறப்பு பெயர் யாது?
7. முதல் ஏழு திருமுறைகளையும் பாடியவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர் யாது?
8. ஒன்பதாம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?

9 பத்தாம் திருமுறையில் அடங்கும் நூல் எது அதனை பாடியவர் யார்?

10. பன்னிரண்டாம் திருமுறையில் அடங்கும் நூல் எது?
11. எட்டாம் திருமுறையை பாடியவர் யார்? அதில் அடங்கும் நூல்கள் எவை?
12. பெரியபுராணம் எத்தனையாம் திருமுறை அதனை பாடியவர் யார்?
13. பதினோராம் திருமுறையை பாடியோரின் தொகை யாது?
14. திருமுறைகளுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?
15. திருமுறைகளை பாடுவோருக்கும் கேட்போருக்கும் கிடைக்கம் நன்மை எது?

**உங்கள் பாடப்புத்தகத்தில் 42ம் பக்கம் தொடக்கம் 57ம் பக்கம் வரை வாசித்து அட்டவணையை நிரப்புக**

| பாடல் | பாடியவர் | பண் | தலம் | சந்தர்ப்பம் |
|---|---|---|---|---|
| உ-ம் அங்கமும் வேதமும் | திருஞானசம்பந்தர் | நட்டபாடை | திருமருகல் திருச்செங்காட்டங்குடி | சம்பந்தர் திருமருகல் தலத்திற்குச் சென்று பெருமதனை வழிப்பட்ட போது அவர் திருச்செங்காட்டங்குடி கணபதீச்சரத்திலுள்ள திருக்கோலத்தை காட்டிய போது |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| அலகு- 9<br>வினாக்கள் | சைவநெறி | தரம் : 10 |
|---|---|---|

## விடுமுறை கால வேலைத்திட்டம்
## இரண்டாந்தவணை -2020

மாணவர் பெயர் :......................

### அலகு 9 திருமுறைகள்

2

தொடர்ச்சி........... **பாடப்புத்தகத்தில் 43ம் பக்கம் தொடக்கம் 57ம் பக்கம் வரை வாசித்து விடைகளை எழுதுங்கள்.**

1. திருமருகலுக்குச் சென்ற சம்பந்தருக்கு சிவபெருமான் எத்திருக்கோலக் காட்சியை காட்டியருளினார்?
2. சீர்காழிக்கு வழங்கப்படும் வேறு பெயர்களை குறிப்பிடுக?
3. சிவபெருமானின் கனல் வீசும் கண் யாரை எரித்தது?
4. குனித்தபுருவமும் என்ற தேவாரத்தில் குறிப்பிடப்படும் இறைவனின் திருவுருவம் யாது?
5. திருநாவுக்கரசருக்கு சூலை நோய் ஏற்பட்டதன் காரணம் யாது?
6. சமணர்கள் திருநாவுக்கரசர் மீது கோபமுற்றதன் காரணம் யாது?
7. சுந்தரமூர்த்ததிநாயனார் தனது கண்களை இழந்ததன் காரணம் யாது?
8. சுந்தரர் இடது கண்ணையும், வலது கண்ணையும் பெற்ற தலங்களை குறிப்பிடுக
9. அந்தணாளன்...என்ற தேவாரத்தில் குறிப்பிடப்படும் புராண கதை எது?
10. பால்நினைந்தூட்டும் என்னும் திருவாசகம் இடம்பெறும் பதிகம் எது?
11. திருவிசைப்பாவை பாடியோர் எத்தனை பேர்?
12. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இரண்டையும் பாடியவர் யார்?
13. திருப்பல்லாண்டை பாடியவர் யார்?
14. பாலுக்குப்பாலகன்...எனும் திருப்பல்லாண்டு பாடலில் குறிப்பிடப்படும் பாலுக்காக அழுத குழந்தை யார்? அக்குழந்தையின் தந்தை யார்?
15. சிவபெருமான் எந்த இடத்தில் இருந்து ஆனந்த தாண்டவம் ஆடுகின்றான் ?
16. யாவர்க்குமாம்..என்ற பாடலில் திருமூலர் குறிப்பிடும் அறச்செயல்கள் எவை?
17. பதினோராம் திருமுறையை அருளியோர் எத்தனை பேர்? அதில் அடங்கும் பிரபந்தங்களின் தொகை யாது?
18. பதினோராம் திருமுறையில் அடங்கும் பிரபந்தங்களுள் இரண்டு குறிப்பிடுக
19. விநாயகனே...என்ற பாடல் அடங்கும் நூல் எது? அதனைப்பாடியவர் யார்?
20. தண்ணளி... என்ற பாடலில் குறிப்பிடப்படும் அரசன் யார்? அவருக்கு இடபாரூடராக காட்சி கொடுத்தவர் யார்?

அலகு- 10
வினாக்கள்

சைவநெறி

தரம் : 10

## விடுமுறை கால வேலைத்திட்டம்
## இரண்டாந்தவணை -2020

மாணவர் பெயர் :......................

### அலகு 10 திருக்கூட்டச் சிறப்பு

1. பெரியபுராணத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?
2. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?
3. பெரியபுராணம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகிறது?
4. பெரியபுராணம் இயற்றுவதற்கு ஏதுவாக இருந்து முதல்நூல் சார்பு நூல் எது?
5. முதல்நூல், சார்புநூல் என்பவற்றை பாடியவர்களை குறிப்பிடுக
6. பெரியபுராணம் யாருடைய வரலாறுகளையும், சிறப்புகளையும் குறிப்பிடுகிறது?
7. பெரியபுராணத்தில் உள்ள விருத்தப்பாக்கள் எத்தனை?
8. பெரியபுராணத்தில் உள்ள காண்டங்கள் எத்தனை?
9. பெரியபுராணத்தில் உள்ள சருக்கங்கள் எத்தனை?
10. திருக்கூட்டச்சிறப்பில் சிவனடியார்கள் எப்படிப்பட்டவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது?

பகுதி 11

பின்வரும் பாடல்களை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

(1)

**ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே**
**பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்**
**ஈர அன்பினர் யாதும் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகையதோ**

1. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சிவசின்னம் எது?
2. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சிவனடியார்களின் கடமை யாது?
3. இப்பாடலின் பொருளை எழுதுக

(2)

**பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை**
**மா வாழ் அகலத்து மால் முதல் வானவர்**
**ஓவாது எவரும் நிறைந்து உறைந்துள்ளது**
**தேவாசிரியன் எனும் திருக்காவணம்.**

1. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டபத்தின் பெயர் யாது?
2. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவர்கள் யாவர்
3. இப்பாடலின் பொருளை எழுதுக

ஆசிரியை : திருமதி. அ.கிருஷ்ணவேணி கொ /முகத்துவாரம் இந்துக்கல்லூரி, கொழும்பு 15